தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 16.] MADRAS:—SUNDAY APRIL, 17, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

கொள்கையை வெளியிடுந் திர[முதலிய.	மனிதத்தூஷணை.
இசிலாமதம்.	முயற்சி.
வியவசாயரசாயனம்.	வர்த்தமானசங்கிரகம்.

ராஜா ஸர். டி. மாதவராவ் K. C. S. I. அவர்களால் கன்வோகேஷனில் வாசிக்கப்பட்ட உபந்நியாசத்தின் பாகம்.

கொள்கையை வெளியிடுந்திரம்.

தகுந்த விசாரணையும் யோசனையுஞ் செய்தபின்பு, உபயோகமான நம்பிக்கைக்கு வருவீர்களாகில், பயம் தயைதாட்சணியம் பாராமல்வெளிவந்து பேசுங்கள். அப்படிச்செய்தால், ஜனப்பொதுபிரயோசனத்திற்கு மிகவும் முக்கியமானதாயிருக்கிற உண்மைவிர்த்திக்கும் படர்ச்சிக்கும் நீங்கள் உதவிசெய்கிறவர்களாவீர்கள். திருஷ்டாந்தமாக, சிறுபருவத்தில் விவாகஞ்செய்விப்பது கேட்டைப்பயக்குமென்று நீங்கள் தெரிந்துகொண்டால், பட்டதும்படாததுமாய்க்கூடமாகப்பேசாமல்,அப்படிப்பட்ட விவாகம் கூடாதென்று கண்டிதமாய்ச்சொல்லுங்கள். சோதிடசாஸ்திரம் அபத்தமானதென்று நீங்கள் நம்பினால், அதை நிர்மலமாய் வெளியிட்டுச் சொல்லுங்கள். நற்சகுனங்கள் துர்ச்சகுனங்கள் என்பவற்றைப்பற்றியும் மூடபக்தி முதலிய வழுக்களைப்பற்றியும் அவ்வாறே பேசவேண்டும். உங்கள் கொள்கைகளை நீங்கள் பயிரங்கமாய்ப் பேசுவதுமல்லாமல், முக்கியமாய்க் கூடியமட்டில் அவற்றின்படி நடப்பதே தகுதி.

எண்ணத்தை மாற்றுதல்.

உங்கள் எண்ணத்தை மாற்றுவதற்குத் தகுந்த நியாயங்களிருந்தால், அப்படிமாற்றிப்போடுவதற்குப் பயப்படவுமாகாது பின்னுக்கு வாங்கவுமாகாது. பிசகான எண்ணங்கொள்வது நம்மெல்லோருக்கு மியல்பு. கியானமும் அனுபவமும் வளர வளர, பிசகைக்கண்டுகொள்ளுகிறோம். பழைய பிசகான அபிப்பிராயத்தையே பின்னுங்கொண்டிருப்பது ஜனங்களின் யோகக்ஷேமத்திற்குத் தடையான பிடிவாதமாகும். பழமையையேவிடாது பின்பற்றிவரவேண்டுமென்கிற தகாத ஆசையினாலே, சீர்திருத்தம் விர்த்தியாவதற்கு மிகுந்த தடையுண்டாகும். மனிதர்கள் எவ்வளவு அதிகமாய் வாசிக்கிறார்களோ அவ்வளவும் நியாயமென்னும் செங்கோன்மைக்கு உட்பட்டவர்களாகி, வழுவான அபிப்பிராயங்களை உடனே உதறிவிட்டு, சரியான அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அப்பிரகாரமே உலகத்திலே மகாசிறந்தவர்கள் சிலர் உண்மையையும் நியாயத்தையும் அனுசரித்து அப்படியே செய்திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

சேர்க்கையும் சம்பாஷணையும்.

இவற்றை கியானமும் சற்குணமும் விர்த்தியாவதற்குக் கருவியாகக்கொள்ளவேண்டும். சமயம் வாய்க்கும்போதெல்லாம் உங்கள் மேலோர்களிடத்திலே கற்கவேண்டும், தாழ்ந்தவர்களுக்குக் கற்பிக்கவேண்டும், ஒருவனைப் புகழவேண்டுமானாலும், இகழவேண்டுமானாலும் வாக்கிலொன்றும் மனதிலொன்றுமாகப் பேசாமல்கூட்டத்திலுள்ளவர்கள்சரியென்றுமெச்சும்படி தக்க அளவினதாகச் சாக்கிரதையாய்ச்சொல்லவேண்டும். கூட்டத்திலும் சம்பாஷணையிலும் பிரகாசிக்கவேண்டுமென்கிறபேரவா கொள்ளலாகாது; கொள்ளின், அதனால் உங்களுக்குப் பிரயோசனமுமொன்றுமிராது, உங்களைப்பற்றி நீங்களே மிகுதியாய் யோசிக்கவேண்டியவர்களாய், கற்பதும் கற்பிப்பதும் ஒழியும்.

———o———

இசிலாமதம்.

கலியப்தம் மூவாயிரத்தெழுநூற்றொன்றின் மேலே, [கி. பி. 600] அரபிதேசத்திலே, மக்க பட்டணத்திலே அப்துல்லாம் என்பவனுக்கு எம்மினு என்பவளிடத்திற் பிறந்த புத்திரனாகிய மகம்மது என்பவன், கல்வி கேள்விகளிலும் மிகவல்லவனாகி, அந்த நாட்டிலே வியாபாரஞ் செய்துகொண்டிருந்தான். பின்பு, யூத மதத்திலுங் கிறிஸ்துமதத்திலும் உள்ள சில சில விஷயங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, தனது புத்தியினாலே சிலவற்றைக் கற்பித்து, ஒரு புத்தகம் எழுதி, அதற்குக் கோரான் என்று பெயர் இட்டுக்கொண்டான். முன்னே ஆதாம், சேத், ஏனோக், ஆபிராம் நூறு ஆகமங்களைக் கொடுத்தார்கள், அவைகள் இப்பொழுது இல்லை என்றும், மூசாநபி [அல்லது மோசே] தபிரேத்என்ற சாத்திரத்தையும், தாவீதுநபி [அல்லது தாவீது] சபூர் என்ற சாத்திரத்தையும், ஈசாநபி (அல்லது யேசு) இஞ்சில் என்ற சாத்திரத்தையுஞ் சொன்னார்கள்; அவைகளெல்லாம் அல்லாவுடைய (அல்லது யேகோவாவுடைய) சித்தத்தின்படியே அந்தந்தக்காலங்களுக்கேவழங்கத்தகும்என்று நியமிக்கப்பட்டன; பின்பு மனிதர்கள் அவைகளைத் தலைதடுமாறச் செய்தார்கள் என்றுஞ் சொன்னான். மோசே செய்த வஞ்சனைபோலவே, தானுஞ்செய்யத்துணிந்து, தான் அல்லாவினால்ஏவப்பட்டு ஒருமலைக் குகையினுள்ளே புகுந்திருந்து, அங்கே கபிரியேல் என்னுந் தூதனாலே கோரான் என்னுஞ் சாத்திரத்தைப் பெற்றுக்கொண்டான் என்று காட்டினான். கிறிஸ்தவர்கள்யேசுவைக் குறித்துக் கற்பித்து எழுதிவைத்ததுபோலவே, தானுஞ் செய்யத்துணிந்து, அல்லாவுடன் பரதீதில் இருக்கிறவர்கள் சகலருக்குந் தான் தலைவன் என்றும், முடிவுநாளிலே சகலரையும் விசாரித்தற்குந் தன்னை விசுவசித்தவர்கள் எல்லாரையும் ஈடேற்றுதற்கும், அல்லாவையும் மனிதரையும் பொருத்துகிற மத்தியஸ்தனாதற்கும், அல்லாவிடத்திலே தான் வரம் பெற்றுக்கொண்டான் என்றும், பின்னும், பற்பல விஷயங்களையும் எழுதி யெழுதிச் சேர்த்துக்கொண்டான்.

இப்படியே, மகம்மது, ஒரு மதத்தை உண்டாக்கி, அதற்கு இசிலாமதம் என்றுபெயரிட்டு "இந்த மதத்தை அங்கீகரிப்பிக்கும்பொருட்டு யாவர் ஒருவரையும் நான் வலாத்காரஞ்செய்யேன்" என்று பிரசித்தஞ்செய்தான். அவன் வீட்டாரும் அவன் சுற்றத்தாருட் சிலருமன்றி, மற்றவர்கள், அம்மதத்தை அங்கீகரியாது, அவனைக் கொல்ல முயன்றார்கள். அதை மகம்மது அறிந்து, தான் இருந்த மக்க பட்டணத்தை விட்டோடிப்போய், மிரோனே பட்டணத்திற் புகுந்து, அங்கிருந்துகொண்டு, கிரிஸ்தவர்கள் தங்கள் சமயத்திலே சகலரும் பிரவேசிக்கும்படி "யாவனொருவன் யேசுக்கிறிஸ்துவை விசுவாசித்தால் அவன் சகல பாவங்களினும் நீங்கிப் பரிசுத்தனாவான்" என்று எழுதிவைத்த உபாயம்போலவே, தானுஞ் செய்யத்துணிந்து, தான் கோரானை ஸ்தாபிக்கும்பொருட்டுயுத்தம் பண்ணுதற்குஅல்லாவிடத்தில் அநுமதிபெற்றான் என்றும், அந்த யுத்த

த்தில் இறந்தவர்கள் சகல பாவங்களினும் நீங்கிப் பரதீசிலே சேர்ந்து ஆனந்தம் அடைவார்கள் என்றும், கோரானில் எழுதிக்கொண்டு, அங்கே சிலரைத் தனக்குப் படைகளாகச்சேர்த்துக்கொண்டு, கோரானை அங்கீகரியாதவர்களைக்கொன்று, பாப்புமார் செய்ததுபோல வாளினாலே பற்பலவிடங்களிலுந் தன் மதத்தைப் பரப்பினான். அவன், லுத்தேர்கல்வீன் மதத்தார்போலவே, மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்னுந்துராசைகளில் அமிழ்ந்தித், தான் விரும்பிய போகங்களெல்லாம் அனுபவித்துக்கொண்டிருந்தான்.

மகம்மது பரதீசிலே சேர்ந்தபோது, யேசுக்கிறிஸ்துவினுடைய மாதாவாகிய மரியாள்முதலிய பன்னிரண்டு பெண்களை, அல்லா, மகம்மதுவுக்கு உபகாரமாகக்கொடுத்து, அங்கே விவாகம்பண்ணிவைத்தார் என்றும், இப்படியே அவன் பரதீசிலே வாழ்ந்திருக்கிறான் என்றும், தங்கள் பொருட்டு அல்லாவிடத்தில் இரந்து கேட்கிறான் என்றும், அவனை விசுவசித்து அவனுடைய சமயத்தை அங்கிகரித்து நடப்பதே கடன் என்றும், கோரானிலே விதிக்கப்பட்ட ஓதல், நீராடல், தருமங்கொடுத்தல், நோன்பு அநுட்டித்தல், மக்கத்துக்குப்போய்அச்சுச்செய்கல் என்னும் பஞ்சகர்மங்களினாலேபாவந்தீர்ந்து பரதீசிலே சேரலாம் என்றும், மகம்மதியர்கள் சொல்லுகிறார்கள். மகம்மதுவின் சரித்திரமும், பிறவுங்கோரானிலே காண்க.

வியவசாயரசாயனம்.

(57-வது பக்கத் தொடர்ச்சி.)

—o—

உலோகசூன்னியபூதங்கள்.

ஜீவமூலம். மூலகாரணமாகிய பூதங்கள் பலவற்றுள்ளும் பிரகிருதியின்கண்விசேஷமாக அமைந்த சீவகோடிகளுக்கு சர்வாவசியகமாயிருப்பது இந்தபூதமே. இதுவாயு அல்லது ஆவிரூபமுள்ளது. இதைஜலரூபமாக்கப்பிரயத்தனப்பட்டும் இதுவரையில் முடியவில்லை. இது ஸ்வேச்சையாகவும் பிரத்தியேகமாகவும் நம்மைச்சுற்றியிருக்கும் ககனவாயுவில் தங்கியிருக்கின்றது. வாயுவில்ஐந்திலொருபாகம்சீவமூலமென்றுசொல்லுவார்கள். இதுஜலத்திலும்மணற்கல்லிலும்மற்றுஞ்சிலகற்களிலும்களிமண்ணிலும்உயிர்ப்பிராணிகளிலும் கலந்திருக்கின்றது. உலகத்தில்ஒருபாதிமுழுதும் இந்தஉபயோகமுள்ளபூதமாயிருக்கலாமென்று சிலர் எண்ணுகிறார்கள். இந்தமூலத்தை (கிளோரயிட் ஆப் பொடாஸ் என்னும்)சாம்பலுப்பைச்சுடுவதினால் எளிதிலுண்டாக்கலாம். இனனும் அநேகஸாதனங்கள் இரசாயன கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும் இவைகள் நமக்குப்பயன்படுதல் அருமையாதலால் அவைகளைச்சொல்லாதொழிக்கின்றோம். இந்தமூலத்திற்குநிறமில்லை, கண்ணுக்குத்தோன்றாது. சமான அளவுள்ள சாதாரணகாற்றையும் ஜீவமூலத்தையும் நிறுத்துப்பார்த்தால் காற்றைப்பார்க்கிலுங்கொஞ்சங்கனமாயிருக்கும். இதுஜலத்தோடு எளிதில் கலக்கிறதில்லை. இதில்பிரகாசமாய்த் தோன்றும் குணம் யாதெனில் நெருப்பைப்பெருக்கிவளர்க்கிறதேயாம். ஒருவர்த்தியைக்கொளுத்தி இந்தவாயு நிறைந்தஜாடிக்குள்விட்டால் அது ஜகஜ்ஜோதியாய்எரியும்; மேலும்வர்த்தியைவெளியில்வாங்கிஅவித்துச்செகப்பாயிருக்கும் அதின் நுனியைமறுபடியும் சாடிக்குள்விட்டால் அதுமுன்போலபிரகாசமாகப்பற்றியெரியும். சாதாரண வாயுவில் இதுவிசேஷமாகக் கலந்திருப்பதினாலேதான் அதனிடத்து நெருப்பையூட்டி வளர்க்குந்தன்மை யிருக்கிறது. மேலும் காற்றி லிந்தபூதம் இல்லாவிட்டால் பிராணிகள் ஒன்றும் பிழைத்திருக்கமாட்டா. காற்றில்லாதவிடத்துப் பிராணிகளிறந்து போவதே இதற்குசாக்ஷியாம். அதிகசந்தோஷத்தால் ஜனங்கள் பொங்கி இறந்துபோவதுபோல் இந்தஜீவமூலத்தைமாத்திரங்கொண்டாலும் பிராணிகள் இறந்துபோகும். ஆதலால் இதுதனியாயிராமல் சகலவிதவஸ்துக்களோடுஞ் சேர்ந்திருக்கின்றது. இதன்சேர்க்கையினாலேதான் பஸ்பங்களென்று சொல்லப்படும் பலவிதமருந்துகள் உண்டாகின்றன. இதன் முக்கியகுணங்கள் அவிந்தபோன வர்த்தியைக்கொளுத்துவதும் குளிர்ந்தஜலத்தோடு எளிதில் கலவாதிருத்தலும் வர்ணம் வாசனையற்றிருப்பதுமே.

ஜலமூலம். இது விசேஷமாக மேற்கண்ட ஜீவமூலத்துடன் ஜலத்தில் கலந்திருக்கின்றது. ஒரு அளவு ஜீவமூலமும் இரண்டளவு ஜலமூலமும் சேர்ந்துதான் ஜலமாகிறது. மேலும் ௧௬- அளவு ஜலமூலத்தின் நிறை ஒரு அளவு ஜீவமூலத்தின நிறைக்குச் சமானமாயிருக்கும். ஆதலால் ஒருஜல அணுவில் - அ - நிறைஜீவமூலமும் ஒரு நிறைஜலமூலமும் இருக்கின்றன. இந்த ஜலமூலத்தை எளிதில் செய்துகொள்ளலாம். எப்படியெனில் ஒருபழைய துப்பாக்கியின் குழை அல்லது வேறு இருப்புக்குழைகொண்டுவந்து அதில் இரும்பு அராப்பொடி போட்டு நெருப்புக்குக் குறுக்கேவைத்துபழுக்கக்காய்ச்சினால் அக்குழையின்ஒருபக்கத்தில் ஒருபானையில் கொதிக்குஞ்சலத்திலிருந்து எழும் ஆவிநுழையும்படிவிட்டால் மற்றொருவழியாக ஷை ஜலமூலம் உண்டாகும். இந்தவாயின்பக்கத்தில் ஒருவத்தியை கொளுத்திக்காட்டினால் ஷை ஜலமூலம் வெளுத்து சற்றே பசுமையான ஜ்வாலையோடு எரிவதைப் பார்க்கலாம். இந்த இருப்புக்குழையில் ஆவிரூபமாய் நுழைகிறஜலமானது பிரிக்கபடுகின்றது. ஜீவமூலமும் இரும்புடன் கலக்குந்தன்மையுள்ளதாதலால் குழையிலிருக்கும் இரும்புசன்னத்தோடுசேர்ந்து அதை பஸ்பமாக்கிவிடும். விடப்பட்ட ஜலமூலமோ அக்குழையின் மற்றொருவாயால் வெளியேவந்து விடுகின்றது. மேற்கண்டவிதமான ஜீவமூலம் இரும்போடு மிசிரமிக்கிற தென்கிறதை ஷை சன்னத்தைக் குழையில் வைக்குமுன் நிறுத்து மறுபடியும் பஸ்பமானபிறகு நிறுத்துப்பார்ப்பதினால் பிரத்தியக்ஷமாகக்காணலாம். என்றால் ஸன்னத்திலும் பஸ்பம் அதிகபளுவாயிருக்கும். ஜலமூலத்தைச் செய்யுஞ் சாதாரணவிதம் மற்றொன்று உண்டு. ஒரு புட்டியில் கொஞ்சஞ்சலமும் சில துத்தநாகத்துண்டுகளும் கொஞ்சம் கந்தகத்திராவகமும் விட்டால் ஷை ஜலமூலம் உண்டாகும். அந்தப்புட்டியின் வாயில் ஒரு குழையைவைத்துமூடி ஜலத்தில் ஜலத்துடன் கவிழ்க்கப்பட்ட மற்றொரு புட்டியின்வாயில் சேர்த்தால் அந்த ஜலமூலம் கவிழ்த்த புட்டியிலிருக்கும் ஜலத்தைநீக்கித் தான் அதில்சேரும். இந்த ஜலமூலம் எல்லாவஸ்துக்களைப் பார்க்கிலும் மெத்தலகுவானபதார்த்தம். ஆதலால் இதைத்தான் புகைக்கூண்டு என்று சொல்லப்படும் ககனக்கூண்டுகளுக்குள் விடுவார்கள். இதுசுத்தமாயிருக்கும்பொழுது இதற்கு நாற்றமும் கிடையாது விஷத்தன்மையுமில்லை. ஆயினும் இது பிராணத்தைக்காக்க உதவாது. ஜலத்தில் கலக்கமாட்டாது. நெருப்பின்மீதுவைத்தால் வெளுத்த பசுமைநிறமுடைய ஜ்வாலையோடு எரிந்து விசேஷகாங்கை யுண்டாக்கினபோதிலும் மெத்தவெளிச்சங் கொடுக்கமாட்டாது.

நிர்ஜீவமூலம். ஜலமும் எவ்விதமாகஜீவமுலத்தோடு சேர்ந்து ஜலமுண்டாக்குகிறதோ அதுபோலவே நிர்ஜீவமூலம் ஜீவமூலத்தோடுகலந்து சாதாரணமான வாயுவை யுண்டாக்கும், வாயுவில் இன்னுஞ்சில பூதங்கள் இருந்தபோதிலும் ஜீவாஜீவமூலங்களிரண்டுமே முக்கியமானவை. இந்த நிர்ஜீவமூலத்தை மிகவும் இலேசாகச் செய்யலாம். காற்றுள்ள ஒருபுட்டியை ஜலத்தில்வைத்து அதில்கொஞ்சம் காடிக்கார (பாஸ்பரஸ்) த்தைச்சுட்டால் இந்த நிர்ஜீவமூலம் உண்டாகும். சுடுகிறதினால் காற்றிலுள்ள ஜீவமூலம் காடிகாரத்தோடுகலந்து எரிந்துபோவதினால் நிர்ஜீவமூலம்புட்டியில்தானே நிற்கின்றது. இதை ஜலரூபமாகவாவது கட்டியாகவாவது செய்யக்கூடாது. இதற்கும் வாஸனையில்லை. இதில் ஒருதீபத்தைக்காட்டினால் உடனேஅவிந்துபோகும். இதனிடத்தில் பிராணத்தைக் காக்கும் குணமில்லை. ஒரு புழுபூச்சியை இதில்விட்டால் உடனே செத்துப்போகும். இதினால இது விஷத்தன்மையுடையதென்று நினைக்கக்கூடாது. இதை ஸ்வாசிக்கும் பொழுது பிராணாதாரமான ஜீவமூலம் இல்லாமையினாலேதானே இதில்விட்ட பிராணிகள் இறந்துபோகின்றன,

த—ஙி.

(இன்னும்வரும்.)

மனிததூஷணை.

ஒருவனையொருவர் பொறுமைகொண்டாயினும் கோபங்கொண்டாயினும் நியாயவிருத்தமான மொழிகளைப் புறத்தே கூறுதலாவது முன் கூறுதலாவது மனித தூஷணை யெனப்படும். இஃது சிறியோர் முதியோரைநோக்கியாவது முதியோர் சிறியோரைநோக்கியாவது உபயோகிக்கப்படும். கீழோராயினுந் தாழவுரை யென்னும் முதுமொழியைக் கைக்கொண்டு நடத்தலே மானுஷீகம். இதனையறவே கைசோரவிட்டு வெறியோரைப்போல் அயுக்தமொழிகளை ஆண் பெண் என்னும் அந்தஸ்து இன்றியே கற்றோரும் மற்றோரைப்போல் உபயோகிக்கத் தலைப்படுகின்றார்கள். இதைப்பெரும்பான்மையாய் நாகரீகமற்றவரிடத்திற் காணலாம்; ஆனால் நாகரீகமுள்ளவரிற் சிலர் மேலையோருக்கு யாதேனும் வித்தியாசமில்லாத அடுக்கு மொழிகளை மூடுக்காய் மொழிவார்கள். தீராக்கோபம் போராய்முடியுமென்பதைப்போல் இருதிறத்தாரும் இடைவிடாமல் தூஷித்துக்கொண்டே வருவாராயின் முடிவில் சண்டையே சம்பவிக்கும். இத்தகைய முடிவு பெறுதற்குமுன் ஒவ்வொருவரும் தமது அறியாமையை அகற்றி நன்மார்க்கத்தைத் தேடுதலே உத்தமம்.

இவ்வுண்மை யொருவழியிருக்க, வைணவராலும் சைவராலும் வெளியிட்டுவரும் தூஷணபத்திரிகைகளை நோக்குழி அவர்களால் வணங்கபபட்டுவரும் தெய்வங்கள்மனிதர்களுக்குச்சமானமும் உயர்வுமின்றி இருப்பதாக அவர்கள் பத்திரிகைகளின் மூலமாய் உணரலாம். சாராயத்தைவார்த்தப பூராயத்தைக் கேள் என்பதைப்போல் இவர்கள வெளியிடும் தூஷணபத்திரிகைகளின் வாயிலாய் அவர்களால் கற்பித்தகடவுளர்களின் இலக்ஷணமும் நடத்தையும் இன்னதென உணர்வார்கள் உத்தமர்கள். இவர்களுக்குள் நேரிட்ட போராட்டமென்னவெனில் தத்தம் கடவுளே மேலானவர் என்பதாம். சைவர் மூர்த்தியை வைணவர் உண்டெனவும் வைணவர் மூர்த்தியைச் சைவர்உண்டெனவும் ஒப்பிப் பரத்துவத்தில அவர்கள் பேதிக்கிறார்கள்.

ஈஸ்வரர் இருவராயின் உயர்வு, தாழ்வு, சமானம் என்னும் நிலையுள்ளவராவார். உயர்வு தாழ்வு உடைத்தாயிருப்பின் இம்மதஸ்தர்களுக்குள் எவ்வாறு துவேஷம் நேரிட்டதோ அவ்வாறு அத்தேவர்களுக்குள்ளும் சண்டைச்சச்சரவு நேரிடவேண்டுமே. அங்ஙனம் இருக்ககாணோம. அவர்களுக்கே இல்லாத துவேஷம் இவர்கள் வரவழைத்துக்கொண்டது என்ன அறியாமை. இஃது தலையாடாதமுன் வாலாடுவதையொக்கும். அல்லது அவர்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருப்பதினால் சச்சரவு அவர்களுக்குள் நேரிடவில்லை யென்போமானால் இருவர் பெருந்தன்மை யுடைத்தாயிருத்தலை எக்காலத்திலும் வெளி யிட்டிருக்கக் காணோமே. அங்ஙனமே வெளியிட்டுள்ளார், ஆனால் மற்றய சமயத்தார் பொறாமைகொண்டு பொய்க் கதை யெழுதித் தத்தம் தேவரையே பெரியோரெனப் பாவிக்கப் புராணங்களைப் புகன்றார் என்றால் ஏனைய மதஸ்தர்களும் அவ்வண்ணம் அறைதற்கு என்னதடை? இவர்கள் புரட்டிப் பொய்க்கதைகளைப் புகலுகையில் சர்வக்கியானமுடைய பெரியோன் சும்மாவிருந்ததற்குக் காரணமென்னை? அப்படிச் சும்மாவிருந்ததினாலன்றோ நகத்தால் கிள்ளிவிடுவதை கோடரிகொண்டு வெட்டவேண்டியதாயிற்று? ஒருவேளை அவர்களுக்குள் பெரியது சிறியதென்னும் தாரதம்மிய மில்லையென்போமானால் பதினெட்டுப்புராணங்களிலும் தாரதம்மியங் கற்பித்தகாரணமென்னை! அப்படிச் செய்வித்தது திருவிளையாட்டென்றால் சிறுபிள்ளைகளுக்கே (தெரு) விளையாட்டு. ஈஸ்வரன்கொண்ட ஆனந்தத்தால் இத்தியாதி சொரூபங்கள் கொண்டு திருவிளையாட்டடைந்ததினாலல்லவா மதங்கள் வேறுபட்டு மனிதர்கள் ஒருவரை ஒருவர் துர்ப்பாஷையால் தூஷிக்கலாயினார்? நிர்க்குண நிர்விகற்பக்கடவுளுக்குத் திருவிளையாட்டேது என்போமானால் புராண இதிகாசங்கள் பொய்யாகும். பொய்யல்லவென்றால் நிர்க்குண நிர்விகற்பமுதலிய அடைமொழிகளின் காரணார்த்தம் அப்பிரயோசனமுடையனவாம். மதங்கள் வேறுபட்டதற்கு மனிதர்கள் காரணமோ கடவுளர் காரணமோ! மனிதர்கள் காண்பதற்கரிய அவர் சொரூபத்தைக் கண்டுசொன்னபடியே வேறுபட்டதென்றால், மனிதர்காட்சி ஒன்றுக்கொன்று ஒவ்வாமையால் அவர்கள் காட்சி பொய்யாகும். அவ்வவர் பக்திக்குத்தக்கவாறு நின்றதென்போமாயின் நினைப்பெழுதற்கு நாமரூபங்காரணம். நாமரூபமில்லாதபோது எழுந்த ரூபங்கள் மனோபிராந்தியாலாகிய கற்பிதரூபங்களே. எங்ஙனமெனில் கானல்நீரைப்போலவும் மருண்டவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பிசாசு என்பதைப்போலவும். பக்தியாலாகிய எண்ணமில்லாதமுன் பகவன் தன்னைக் கண்டுகொள்ளும்பொருட்டு வெவ்வேறு சொரூபங்களடைந்தாரென்போமானால், ஓர்கடவுள் சொரூபம் அதினுடைய மற்றொரு சொரூபத்தால் வணங்கப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. விகாரியல்லாத சர்வவியாபி விகார சொரூபங்கொண்டு, அபூரண வியாபியானதினாலன்றோ சைவமென்றும வைணவமென்றும் அனேகமதங்களாய், ஒன்றுக்கொன்று ஒவ்வாமையாய், ஒருவருக்கொருவர் மதவாதங்கொண்டு, வாயில் வழங்காமொழிகளைப் பத்திரிகைகளின்மூலமாய் வெளியிட்டுப் படிப்போர்க்கு வெறுப்பும் வெட்கமும் வருவிக்கின்றனர். இத்தமிழ்ப்பாஷையில் தூஷணமொழிகளைக் கற்கத்தக்க புத்தகமில்லையென்று எண்ணியா துர்மார்க்கமாய்த் தூஷிக்கத்தலைப்படுகின்றது? அல்லது இச்சமயிகளுக்குள் நியாயவாயிலாய்த் தர்க்கிக்காமல் இழியமொழிகளை வழியிலாமல் வழங்குவது சமய சாம்பிரதாயமென்று புறச்சமயத்தாரெண்ணவா? இது விலங்கினத்திற்கு மடாது. சூதம்வாதம் வேதனைசெய்யுமென்று பரியாலோசித்துத் துர்மார்க்கத்தைவிட்டு சன்மார்க்கத்தைப் பெறுதலே மனிதப்பேறு.

அபிமானி.

முயற்சி.

இவ்வார்த்தையின் அருமைபெருமையைக் கண்டுணர்ந்தவராகியதிருவள்ளுவநாயனார் இதைப்பற்றி ஓர் அதிகாரம் வரைந்திருக்கிறார். இவ்விஷயத்தைப்பற்றி இங்கிலீஷ்வித்வசிகாமணிகள் அளவற்றநூல்களியற்றியிருக்கின்றார்கள். நம் தமிழ்த்தேயத்தின்கண் இது அவலமாகக் கொளளப்படுகின்றது. முயற்சியானது நன்முயற்சி அன்முயற்சியென இருவகைப்படும். நன்முயற்சியித்தகைமையதென்றும் அன்முயற்சி யித்தன்மையதென்றும்செவ்வையாய்க்கற்றறியவேண்டும். நாட்டுக்குஐசுவரியந்தேடவர்த்தகத்தில்முயல்வது நன்முயற்சி, அடிமை வேலையென்னத்தக்க உத்தியோகத்தில் பிரவேசிப்பதே கண்ணியமென உத்தேசித்துத் தாழ்வடைவது அன்முயற்சி. துரைத்தனத்தைச் சீர்திருத்தவகை பார்ப்பது நன்முயற்சி, மதாவேச ஆபாசங்களில தலையிட்டுக்கொண்டு வீண் போராட்டம் முயல்வது அன்முயற்சி. ஏழைகளைப்பார்த்து அன்னவஸதிரமளித்து அவர்களின் சமயோசிதத்தின் குறிப்பறிந்து மாத்திரம் மகிழ்விப்பது நன்முயற்சி, தேவடியாட்களுக்கு திருடியாவது கொண்டுபோய்க்கொடுத்து அவர்கள் காலில்விழுந்துகிடக்கும் தடிராமர்களுக்கு வேண்டிவேண்டிச்சாப்பாடுபோட்டுதக்ஷிணை கொடுத்துசோம்புத்தன்மையை உலகில் விர்த்திசெய்யப்பார்ப்பது அன்முயற்சி. ஸ்திரீகளுக்குக் கல்விகற்பித்து அவர்கள்பால் அறிவுவிர்த்தியாக்கமுயல்வது நன்முயற்சி, ஸ்திரீகள் மடமையில் மூழ்கி வீண் தெய்வபக்தியாலும் பழையவழக்கங்களை விடாவுறுதியாலும் வீண்விரயமுண்டுபண்ணி சமுசாரங்களை அலலலபடுத்தும்படி விட்டுப்பார்ப்பது அன்முயற்சி. சிறுவர்களை இளமையிலேயே நற்குணங்களில் பழகும்வகையைக்கவனிப்பது நன்முயற்சி, அவர்களை துன்மார்க்கர்களாக்கி பின்பு அவர்கள்மீது பழிகூறப்பார்ப்பது அன்முயற்சி. அதிகாரம் வந்தபோது குடிகளுக்கு துரைத்தனசகாயவிதிகளை போதித்து அவர்களைத்தனது குழந்தைகளாகக்கொண்டு காப்பாற்றி அவர்களுடைய செல்வப்பொருள் மிகுதியாம்வகைகளுக்குத்தக்க யோசனைகள்சொல்லி அவர்களுள் ஒற்றுமையை விர்த்திசெய்து புகழைத்தேடுவது நன்முயற்சி. அதிகாரிகள் குடிகளுக்குத்துன்பம்செய்துசுயலாபத்தைநாடி அவர்களுடைய விவகார ஒழுங்குகளுக்குக் கேடுநினைத்து, அவர்களுக்குப் பலவாறாய் பயத்தையும் விசனத்தையும் பெருகச்செய்து வீண்பெருமையை நாடுவது அன்முயற்சி. இவ்வாறே எதிலும் நன்முயற்சி அன்முயற்சியென்ற தரங்களைப் பிரித்தறியவேண்டும்.

(இலலிதாபிரசங்நோதயம்).

வர்த்தமானசங்கிரகம்.

நமது சிறப்புற்றோங்கிய புது கவர்னரவர்கள் நீலகிரிக்குச் செல்லுமார்க்கத்தில் சேலத்திலிறங்கினார்கள். இவர்களுடையவரவுக்காக வீதிகளும் சில மாளிகைகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கலெக்டர்முதலாகிய பெரியமனிதர்கள் எதிர்கொண்டழைத்துப்போனார்கள். நமது காருணிய கவர்னரவர்கள் 1882௵த்திலே சேலங் கலகம் நடந்த தெருக்களின்வழியாய்ச் சென்று சேவாப்பேட்டையடைந்து, அங்கு சித்தஞ்செய்யப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் வீற்றிருந்தார். அப்போது சேவாப்பேட்டை குடிகள் விண்ணப்பமூலமாய் அவரது நல் வரவினால் தாங்கள் ஆனந்தங்கொண் டிருப்பதையும். அவரது ஆளுகை முற்றும் அதிக நன்மை பயக்குமென்பதற்கு ஆரம்பத்திலேதானே அத்தாட்சி காணுகிறதையும், பின்னுஞ் சில உரித்தான உபசார வார்த்தைகளையுஞ் சொல்லி, சில வருஷகாலமாய்த் தங்களுக்குண்டாயிருக்கிற மனோசஞ்சலங்களைப்பிரபு அவர்கள் அவ்விடத்திற்கு வந்த இந்த முதல்தடவையிலேதானே தெரிவித்துக்கொள்ளின், குற்றம்பாராட்டமாட்டார்களென்கிற உறுதியுண்டு, அத்துயரத்திற்குக் காரணம் பலவாதலால் விவரித்துச் சொல்லுவது இது சமயமல்ல; தங்கள்மேன்மையான வர்த்தகர்களிலனேகர் வலியவலசை வாங்கிப்போய்விட்டதினால் வியாபாரமுஞ் செல்வமுங் குறைந்துவிட்டது; ஊரைவிட்டுக்கொண்டுபோய்விடப்பட்ட தங்கள் பட்டணத்தாரும் இப்போதுதான் தங்களிடம் வந்துசேர்ந்தார்கள்; தங்கள் வர்த்தகம் இன்னும் தலைநிமிர்வது கஷ்டமாகவேயிருக்கிறது;—

இந்துக்கள் ஆட்சேபித்துக்கொண்டிருக்கும்போதே, வழக்கமாய் அவர்களுடைய கோலஞ் செல்லுமார்க்கத்திலே அவர்களுடைய ஆலயங்களுக்குச் சமீபத்தில் மசூதிகட்டவொட்டப்பட்டது; ஹோபார்ட் பிரபு அவர்களுடைய துரைத்தனத்தில் பிறந்த உத்தரவின்படி இந்து உற்சவாதிகோலங்கள் மசூதிவழியாய்ச்செல்லக்கூடாதென்று பிரதேசமாஜிஸ்திரேட்டினால் தடைசெய்யப்பட்டது; இந்த சங்கதி ஹைகோர்ட்டில் விவரிக்கப்பட்டதினமேல், இஷ்டமான இடத்திலே மசூதி கட்டிக்கொள்ளுவதற்கும் ஆராதனைகாலத்திலே கோலத்துக்குரிய கீதவாத்தியங்களை நிறுத்திப்போடும்படி பிடிவாதஞ் செய்வதற்கும் மகமதியர்களுக்குச் சுதந்தரமிருக்கிறதென்னும்போது, மற்றக்காலங்களிலே ராஜபாட்டையில் வாத்தியத்துடனே ஊர்கோலம்போக இந்துக்களுக்குச் சுதந்தரமிருக்கிறதென்று அந்தக் கோர்ட்டார் தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தின்படி அப்போதிய கலெக்டர் நடத்திவந்தார். பிந்தி வந்தவர் அதற்கு மாறாக நடத்தியதால், கலகத்துக்கிடமுண்டாயது; ஆகமே பிராணச்சேதமுண்டாகியது, மசூதி இடிக்கப்பட்டது. பெருந்தன்மையுள்ள பட்டணத்தாரநேகர் விசாரணையின்பேரில் தீவாந்தரத்துக்கு அனுப்பப்பட்டார்கள். அழிக்கப்பட்ட மசூதியை அவ்விடத்திலேதானே மறுபடி கட்டக்கூடாதென்று அடிஷனல்செஷன்ஜட்ஜி சிபாரிசு செய்தார், ஆனால் அவரவருக்குரிய சுதந்தரங்களில் குறுக்கிடுவது எவ்வளவேனும் தகுதியல்லவென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள். கவர்ணமெண்டு செலவிலும் விசாரணையிலும் அவ்விடத்திலேதானே மறுபடி மசூதி கட்டிக்கொடுக்கப்பட்டது. இவ்விதமாய் ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்தின்படி மகமதியருடைய சுதந்தரத்தைப் பாராட்டிவரும்போது, இந்துக்களுடைய சுதந்தரத்துக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலே அந்த கோர்ட்டு தீர்மானம் அலட்சியஞ்செய்யப்பட்டது. அதுமுதல் இரண்டுசாதியாருக்குமுள்ள விவாதமபைசலாகவேணுமென்பதை முன்னிட்டுக்கொண்டு மசூதிபக்கத்திலுள்ளமார்க்கமாய் வழக்கமான இந்துகோலம் செல்வது நிறுத்திப்போடப்பட்டது. இந்துக்கள் தங்கள் தங்கள் மதத்தைப் பிராணாதாரமாக எண்ணியிருக்கிறவர்கள்; முக்கியமாய்த் தாழ்ந்த வகுப்பினர்களுக்குமதத்திலுள்ள மேன்மையானபாகத்தைப்பார்க்கிலும் (உற்சவமுதலிய) சடங்குபாகம் அகத்தியமானது. இந்த நான்குவருஷகாலமாய்ப் பிரம்மோற்சவாதிகள் நிறுத்தப்பட்டிருப்பது அதிக வருத்தத்தை விளைத்திருக்கிறதென்று கூறி, இருதிறத்தாருக்குரிய சுதந்தரங்களைச் சமமாய்ப்பாராட்டவேண்டுமென்பதற்குண்டான சில நியாயங்களையெடுத்துக்காட்டி வாழ்த்திவிண்ணப்பத்தை முடித்தார்கள். சிறப்புற்றோங்கிய கவர்னரவர்கள் விண்ணப்பத்தில் தமக்குத் தெரிவித்திருக்கிற சகல சங்கதிகளையும்பற்றி ஆலோசிப்பதாக வாக்குறுதிசொல்லியிருப்பதால், நியாயங்கிடைப்பதற்கு சந்தேகமிராது.

சென்னை முனிசிபல் கமீஷனர்கள் கூடிய விசேஷ சபையிலே முனிசிபல் ஆக்ட்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்டைக்குறித்து சர்சை செய்ததில் ஸ்ரீமான் அநந்தாசாரியாரவர்கள் பேசியதாவது.—யோசிக்கவேண்டிய அம்சங்கள் ஐந்திருக்கின்றன. முனிசிபாலிட்டி காரியங்களைப் பின்னுஞ் சீராய் நடத்தவேண்டிய விஷயமொன்று; முனிசிபாலிட்டியை பப்ளிக் வர்க்ஸ் (மறமத்து) இலாக்கா; கன்சர்வான்சி சானிட்டேஷன (சீர்ப்பாடு-ஆரோக்கியம்) இலாக்கா, சில்லறை இலாக்காவென மூன்றாகப் பிரிக்கவேண்டும். இந்த மூன்று இலாக்காக்களுக்கும் தேர்ந்த ஒவ்வொரு தலைவரிருக்கவேண்டும். மறமத்து இலாக்காவுக்கு இஞ்சினீர் தலைவராயிருந்துகொண்டு, முனிசிபல் சபையிலும் மெம்பராயிருக்கிறார்; இது சரிதான். இரண்டாவது இலாக்காவுக்கு டாக்ட்டர் தலைவராயிருக்கவேண்டும்; அதுவிஷயமாய் அவரோடு ஆலோசனை செய்யவேண்டியதிருக்குமாதலால், அவரும் முனிசிபல் கமீஷனர்களிலொருவராயிருக்கவேண்டியது அவசியமே. ஹெல்த் ஆபீசர் நேமிக்கப்பட்ட காலத்தில், அவரும முனிசிபல்போர்டில் சேர்ந்திருக்கவேண்டுமென்கிற ஆவசியகம் உணரப்பட்டது; ஆனால் சட்டம் இடங்கொடுக்கவில்லை. மூன்றாவது இலாக்காவுககுப் பிரசிடெண்டு தலைவராயிருப்பதேபோதும். வரிஏற்பாடுசெய்வதற்கும் செலவைக்கிரமப்படுத்துவதற்கும் ஒரே உத்தியோகஸ்தரிருக்கிறார், அது திருப்திகரமானதல்ல. மாசமொன்றுக்கு ரூ 200 க்குள்ளாக அசெஸ்ஸர்என்னும் பேரால் ஒருவனைநேமிக்கவேண்டும். தற்காலத்தில் வரிக்குள்ளாகவேண்டியதில்லாத அநேக ஏழைகளுக்கு வரிபோடப்பட்டிருக்கிறதென்றும், வரிக்குள்ளாகவேண்டிய அநேகபணக்காரர்களுக்குவரிபோடாமலிருக்கிறதென்றும் நம்மில் சிலருக்கு மனதிற்பட்டிருக்கிறதென்று கூறினார். (அப்போது அதுயதார்த்தமென்கிறதொனியுண்டாயது.) இவையெல்லாம் கீழ்உத்தியோகஸ்தர்களுக்கு குறைந்த சம்பளங் கொடுக்கிறதின் பலன்தான்.

கமீஷனர்கள் அதிக உபயோகமுள்ளவர்களா யிருக்கவேண்டியதுபற்றி, அந்தந்த டிவிஷன் கமீஷனர்கள் குறித்தவிடத்திலே வாரத்திற் கொருவிசை கூடி, வரிசெலுத்துகிறவர்கள் ஏதாவது சொல்லிக்கொள்வதைக்கேட்டு, அந்த டிவிஷனுக்கு வேண்டியிருக்கிற காரியங்களை நிறைவேற்றும்வகையில் அபிப்பிராயங் கொடுக்கிறவர்களாயிருக்கவேண்டுமென்கிற ஒரு செக்ஷன் ஆக்ட்டில் சேர்க்கவேண்டும். இந்த ஏற்பாட்டினால் யாருக்காக நாம் வேலைசெய்கிறோமோ அவர்களோடு பேச இடமுண்டாகும். பின்னும் அந்த டிவிஷன் கமீஷனர்கள் ஸ்டாண்டிங்கமிட்டியிலே பிரதிநிதிகளா யிருக்கவேண்டும்; அதாவது ஐந்து மெம்பர்களுக்கு வதிலாக எட்டு மெம்பர்களிருக்கவேண்டும். முனிசிபாலிட்டி சிப்பந்திகளிலே எவனையாவது தள்ளிப்போடுவதற்கு பிரசிடெண்டுக்குண்டாகிய அதிகாரத்துக்குத் தடையொன்றுமில்லை; ஆனால் ஐம்பது ரூபாய் சம்பளத்துக்குட்பட்ட உத்தியோகஸ்தர்கள் ஸ்டாண்டிங்கமிட்டியாருக்கும், அதற்குமேற்பட்ட உத்தியோகஸ்தர்கள் கமீஷனர்களுக்கும் அப்பீல் செய்துகொள்ளும்படியான ஏற்பாடு செய்வது நலம். கமீஷனர்கள் நடத்துகிற சரித்திரங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகலாமென்பதற்கு ஆக்ட்டில் செக்ஷனொன்றுமில்லை. அப்பீல்செய்துகொள்ளுகிற உத்தியோகஸ்தர்களுடைய யோக்கியாயோக்கியதையை ஆலோசிப்பதுபோன்ற ரகசியமான சங்கதிகளுக்குத்தவிர மற்றவைகளுக்குப்பத்திரிகைக்காரர்களைச்சபையில்வந்திருக்கவொட்டலாம.—இந்த சங்கதிகளையும் மற்றுமுள்ள திருத்தப்பாடான சங்கதிகளையும்பற்றி ஆலோசிக்கும்படி ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

பிரேஞ்சு ரெயில்வேய்களிலொன்றில் கொஞ்சநாளுக்குமுன்னேதான் செதுகிடக்கக்காணப்பட்ட ஒரு தொழிலாளி நான்குகோடிரூபாய் ஆஸ்திக்கு சட்டப்படி பாத்தியஸ்தனாயிருந்தானாம். அவன் லண்டன்பட்டணத்துத் திரேஜரியிலே தன் ஆஸ்தியை வாரிசுதாரர்கள் வந்தால் கொடுக்கும்படி கட்டிவைத்து இந்தியாவில் இறந்துபோன இங்கிலீஷ் ஜனரலுடைய வமிசத்தான். அந்தப்பணம் இதுவரையில் சொடர்வட்டி சேர்ந்துபெருகிவந்தது. அந்தத்தொழிலாளிக்குப் பணமில்லை; அங்கேயிருக்கிற செல்வம் தனக்குச் சேரவேண்டியதென்று அறிந்திருந்தும், வியாச்சியந் தொடரவகையில்லாமல், ஒன்று பாதி பேரக்காரர்களோடு பேரம்பேச, அவர்கள் கொடுக்கிறோமென்று சொன்ன தொகை வெகு கொஞ்சமாயிருந்தபடியால் அதை வெறுத்துவிட்டுத் தற்கொலைசெய்துகொண்டான்.

சென்றமீ 29உ-யோடு முடிகிறவாரத்திற்கு பஞ்சாப்முழுவதும் பயிர் மிகவும் க்ஷீணித்திருப்பதாக ரிபோர்ட்டு செய்யப்பட்டது. பிரஜபோர் - முல்த்தான்டிஸ்திரிகட்டுகளிலே தண்ணீர்பாய்ச்சப்பட்ட இடங்களில் தவிர மற்றவிடங்களெல்லாம் கெடுதியென்று அறிக்கையாயிருக்கிறது. ரேவல்பிண்டியிலே சராசரியில் சீர்தான். அதிகமழை பெயாவிட்டால் மிகுந்த துன்பம் நேரிடுவது நிச்சயம்.

அறிக்கை.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத் தொகைகளு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

பத்திரிகைக்கு எழுதும்கடிதமுதலியவிஷயங்களை
மாத்திரம்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும் ;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிறாஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.